**ஆயுர்வேத வைத்திய சபை - 2025**

**-----------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

ஆயுர்வேத வைத்திய சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புகளுடன்கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை, ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக குழுமத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின்தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் சபையின்தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- சபைதனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபைவளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் III ஆம் பிரிவு | | | |
| (i) | 11(1)(உ) பிரிவு | பதிவு செய்யப்பட்ட ஆயர்வேத மருத்துவர்களினால் அவர்களிற்கிடையே தெரிவு செய்து கொள்ளும் மூன்று அங்கத்தவர்கள் | 1963 மார்ச் 15 திகதிய இலக்கம் 13564 கொண்ட வர்த்தமானி பிரகாரம் வாக்கெடுப்பு நடாத்த அதிக செலவு மற்றும் செயன்முறை | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேரவையின் அங்கத்தவர்களாக நியமிக்க வேண்டிய போதும் அந்த மூன்று அங்கத்தவர்களை நியமிக்க மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலத்திற்கு பொருத்தமற்றதன் மீது கடினம் ஆகையால் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் குறித்த பகுதியை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சட்ட திருத்தத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதென. | அவ்வாறு செயற்பட இயலாத நடைமுறை சிக்கல்களை அகற்றிக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல ஆண்டுகளான சுட்டிக் காட்டப்படும் குறையாகையால் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 18 (இ) மற்றும் (ஈ) பிரிவுகள் | 2025 திசெம்பர் 31 திகதியன்றுசபையின் பதிவு செய்திருந்த தாதிமார்களின் எண்ணிக்கை 39 மற்றும் மருந்தாளர்களின் எண்ணிக்கை 260 ஆனதுடன் பதிவினை காலரீதியாக புதுப்பிக்கும் முறைமையொன்றை பின்பற்றியிருக்கவில்லை. ஆயர்வேத மருத்துவத் துறைக்கு விசேடமான தாதி அலுவர்களை ஆட்சேர்த்து பயிற்றுவிக்கும் முறைமையை பின்பற்றுவதற்கு பதிலாக மேற்கத்தேய மருத்துவ முறைமையின் கீழ் பயிற்சி பெற்ற 100 தாதி அலுவர்களை ஆயுர்வேத மருத்துவ துறைக்கு ஆட்சேர்த்திருந்த போதும், சட்டத்தின் நோக்கத்தை எதிர்பார்த்த மட்டத்திற்கு அடைந்து கொள்ள இயலாதிருந்தது. | 2025.01.01 திகதி நியமிக்கப்பட்ட புதிய ஆயர்வேத மருத்துவ பேரவையினால் அரச தாதிகள் கல்லூரியின் மூலம் பயிற்சி பெறும் தாதி அலுவர்கள் தாதிகள் பேரவையில் பதிவு செய்துள்ளதால் ஆயர்வேத மருத்துவ பேரவையில் பதிவு செய்வது கட்டாயம் இல்லையென 2025.09.09 திகதி ஒன்றுகூடிய பேரவை தீர்மானித்ததுடன் ஆயர்வேத தொழில்துறையினரை பதிவு செய்யும் முறைமையை மீளாய்வு செய்யும் உபகுழு ஒன்றின் மூலம் ஆயுர்வேத மருந்தாளர்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. 2026.01.13 திகதி முதல் ஆயுர்வேத மருந்தாளர்களை பதிவு செய்ய ஆரம்பித்துள்ளதென. | சட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செயற்பட இயலாத நடைமுறை சிக்கல்களை அகற்றிக் கொள்ள விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பல ஆண்டுகளான சுட்டிக் காட்டப்படும் குறையாகையால் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 19(1)(அ) பிரிவு | பேரவையினால் அந்த பேரவையின் செயலாளராகவும் பதவியணியின் பிரதான அலுவலராகவும் செயற்பட வேண்டிய பதிவாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதும், அந்த பதவிக்கு நிரந்தர அடிப்படையில் பதிவாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்காது ஒப்பந்த அடிப்படையில் மற்றும் பதிற்கடமை அடிப்படையில் தொடர்ந்தும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | ஆயுர்வேத பேரவையின் பதிவாளரை ஆட்சேர்க்க HM-1-1 சம்பள குறியீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது டன் அந்த குறியீட்டிற்கு உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஆரம்ப பட்டத்திற்கு மேலதிகமாக குறித்த துறைகளில் பட்டப் பின் படிப்பை (Masters) பெற்றிருப்பது கட்டாயம் என முகாமைத்துவ திணைக்களம் அறிவித்துள்ளதுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தை 2026.02.19 திகதி சுகாதார மற்றும் பெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் கிடைத்தவுடனே பதிவாளரை ஆட்சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென. | இச் செயன்முறை கடந்த பல ஆண்டுகளாக நடைமுறையான போதும் இது வரை போதிய முன்னேற்றத்தை குறிப்பிடாததால் ஆயுர்வேர சட்டத்தின் பிரகாரம் விரைவில் முயற்சி எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 55(1)(உ) மற்றும் 55(2) பிரிவுகள் | (i) 2025 சனவரி 01 திகதி நியமிக்கப்பட்ட 24 ஆவது புதிய வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், 2025 பெப்ரவரி 11 நியமிக்கப்பட்ட ஆயர்வேத தொழிலாளர்களை பதிவு செய்யும் முறைமையை மீளாய்வு செய்யும் உபகுழுவின் பரிந்துரைகளை முன்வைத்து வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்த பின்னர் உரிய எழுத்துமூல மற்றும் வாய்மூல பரிசோதனைகளை | பரம்பரை மருத்துவர்களை பதிவு செய்வதற்காக தற்போது பின்பற்றும் செயன் முறை 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 82 ஆம் பிரிவின் 03 ஆம் உப பிரிவின் பிரகாரம் முறையாக அரச வர்த்தமானியில் பிரசுரிக்காததால் அந்த பிரமாணங்கள் சட்ட ரீதியற்றதென தீர்மானித்ததால் இந்த பரிசோதனையை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளதாக மற்றும் இது தொடர்பான சட்ட நிலையை | ஆயுர்வேத சட்டத்தின் பிரகாரம் விரைவில் முயற்சி எடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ள போதும், 2026 பெப்ரவரி 20 திகதி வரை அதாவது 13 மாதங்களிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும், அக்குழு பரிந்துரைகள் முன்வைக்கப்படாத காரணத்தால் எழுத்துமூல மற்றும் வாய்மூல பரிசோதனைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தெளிவுபடுத்திக் கொள்வதற்காக 2025.07.07 திகதி மற்றும் 2025.11.20 திகதிகளில் சட்டமா அதிபரிற்கு அனுப்பியுள்ளதுடன் அந்த பரிந்துரை கிடைத்த பின்னர் இந்த பரிசோதனை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதென. | |
| | | (ii) புதிய வைத்திய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முன்னர் கோரப்பட்ட ஆயுர்வேத தொழிலாளர்களின் எழுத்துமூல மற்றும் வாய்மூல பரிசோதனைக்கான விண்ணப்பங்கள் 2024 மற்றும் 2025 ஆண்டுகளிற்காக விண்ணப்பதாரர்கள் 476 மற்றும் 485 பேர்கள் முறையே ரூபா 2,426,500 தொகை மற்றும் ரூபா 2,037,000 தொகையை செலுத்தியிருந்தனர். விண்ணப்பங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய ஏற்பாடுகள் / முறைமைகள் பிரகாரம் எழுத்துமூல மற்றும் வாய்மூல பரிசோதனையை நடாத்த வேண்டிய போதும், பேரவை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை | பரம்பரை மருத்துவர்களை பதிவு செய்வதற்காக தற்போது பின்பற்றும் செயன் முறை 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்தின் 82 ஆம் பிரிவின் 03 ஆம் உப பிரிவின் பிரகாரம் முறையாக அரச வர்த்தமானியில் பிரசுரிக்காததால் அந்த பிரமாணங்கள் சட்ட ரீதியற்றதென தீர்மானித்ததால் இந்த பரிசோதனையை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளதாக மற்றும் இது தொடர்பான சட்ட நிலையை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக 2025.07.07 திகதி மற்றும் 2025.11.20 திகதிகளில் சட்டமா அதிபரிற்கு அனுப்பியுள்ளதுடன் அப் பரிந்துரை கிடைத்த பின்னர் இந்த பரிசோதனை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |
| (v) | 19 மற்றும் 50 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட | சுபையின் பதிவு செய்துள்ள அனைத்து மருத்துவர்களும் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை தமது பதிவை | அச்சு ஊடகத்தின் மூலம் மற்றும் மாகாண ஆயுர்வேத ஆணையாளர்கள் | வேளியிடப்பட்ட ஆயுர்வேத மருத்துவ பேரவை விதிகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேண்டிய 18 ஆம் பிரிவின் (ஊ) பந்தியின் கீழ் ஆயுர்வேத வைத்திய சபையின் 2014 இன் 01 ஆம் இலக்க பதிவு செய்த ஆயுர்வேத மருத்துவர்களின் (தொழில் நன்நடத்தை) விதிகளின் 10 ஆம் விதி | புதுப்பித்துக் கொள்ள வேண்டிய போதும் 05 ஆண்டுகளை விஞ்சிய 327 மருத்துவர்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊடாக அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மற்றும் இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் மூலம் அரச சேவையில் பட்டதாரி மருத்துவர்களின் பதிவை புதுப்பிக்கும் போக்கு அதிகரித்துள்ளதுடன் பரைபரை மருத்துவர்களின் பதிவை புதுப்பிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருவதென. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிவினை ஊக்குவித்தல் ம்ற்றும் பதிவினை புதுப்பிக்கும் வருமானத்தை சேகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான செயன்முறை ஒன்றை பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 01/2023 கொண்ட வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் (இ) பந்தி | தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாடு, இலத்திரன் பயமாக்கல், நிகழ்நிலை சேவை வழங்கல் ஆகிய முறைமைகளை அறிமுகம் செய்வதன் மூலம் பேரவையின் மீண்டுவரும் மற்றும் செயற்பாட்டு செலவுகளை குறைத்துக் கொள்வது தொடர்பான மூலோபாயத்தை திட்டமிட்டு செயற்படுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | கணனித் தொகுதியை வடிவமைத்துக் கொள்வதற்காக 2026.02.10 திகதி ஆயுர்வேத மருத்துவ பேரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2026 ஆண்டில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 பந்தி | அறிமுகம் செய்த பொது முயற்சிகளிற்கான நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டி 2.3 பந்தி பிரகாரம் தயாரிக்க வேண்டிய மூலோபாய திட்டத்தை அந்த ஏற்பாடுகள் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. | பொது முயற்சிகளிற்கான நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டி 2.3 பந்தி பிரகாரம் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதென. | வுழிகாட்டி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,033,449ஆன மிகையானதுடன் அதற்கு நேரொத்த/எதிராக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 218,629ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,252,078ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு மீளாய்வாண்டின் செயற்பாட்டு வருமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 8,697,778 இனால் அதிகரித்தமை முக்கிய காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உபகுழு அறிக்கையை சமர்ப்பிக்கும் தாமதம் காரணமாக தேசிய மற்றும் சித்த மருத்துவர்களை பயிற்றுவிக்கும் கைநூலிற்கு ஒத்த நிகழ்வாக பாடத்திட்டத்தை தயாரிப்பதுவும் தொடர்ந்தும் தாமதித்திருந்ததுடன் எழுத்துமூல மற்றும் வாய்மூல பரிசோதனை நடாத்தப்படாத காரணத்தால் பதிவுக் கட்டணம் மற்றும் பதிவனை புதுப்பிக்காத மருத்துவர்களின் பதிவனை புதுப்பிப்பதற்கு ஈடுபடுத்திக் கொள்வதற்காக ஆண்டு முழுவதும் நடாத்த உத்தேசிக்கப்பட்டிருந்த நடமாடும் பணிமனையும் நடாத்தப்படாத காரணத்தால் பேரவைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குழு அறிக்கை நகழ் 2026.02.10 திகதி பேரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்து விரைவில் இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதெனை. | உபகுழு அறிக்கையை விரைவில் பெற்றுக் கொண்டு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் உத்தியோகபூர்வ இணையம் செயழிலந்து இருந்ததுடன் நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் நவீனமயமாக்க திட்டமிட்டிருந்த போதும் இதுவரை அந் நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கவில்லை. | பேரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் புதிய இணையம் ஒன்றை வடிவமைத்துக் கொள்வதற்காக 2026.02.09 ஆம் திகதி விலைமணு கோரி முன்கூடிய விடயங்களை தெளிவுபடுத்தும் கூட்டத்தை 2026.02.18 ஆம் திகதி நடாத்தியதுடன் அதன் பிரகாரம் இந்த இணையத்தை விரைவில் தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதெனை. | பேரவையின் உத்தியோகபூர்வ இணையத்தை விரைவில் தயாரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் நோக்காகக் கொண்ட செயற்பாடுகளின் முன்னேற்றம்.

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய 48 செயற்பாடுகளில் 15 செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்காததுடன் 06 செயற்பாடுகளின் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருக்காததுடன் அந்த செயற்பாடுகளின் செயலாற்றுகை | 2026 ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் 2026 – 2030 நிறுவன திட்டத்தை மீண்டும் மீளாய்வு செய்து தயாரிக்க நடவடிக்கை எடுத்துவருவதாக மற்றும் அதன் பிரகாரம் 2025 ஆண்டில் நிறைவு செய்ய இயலாது போன பணிகளை 2026 | செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயலாற்றுகையை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

45 சதவீதத்திற்கும் 85 ஆண்டில் நிறைவு செய்ய சதவீதத்திற்கு இடையிலான நடவடிக்கை எடுப்பதென. வீச்சளவை எடுத்திருந்தது.